

# அலகு – 6


# தகவல் செயலாக்கம்

## 6.1 முறையான பட்டியல்

கொடுக்கப்பட்டுள்ள பொருட்களை, பல்வேறு காரணங்களின் அடிப்படையில் அவற்றை அனைத்தையும் பட்டியலிடுதல்.


### எடுத்துக்காட்டு

நான்கு அட்டைகள் உள்ளன.



உங்களிடம் இருவண்ணப் பென்சில்கள், அதாவது கறுப்பு மற்றும் வெள்ளை உள்ளது. இந்த வண்ண பென்சில்களைப் பயன்படுத்தி ஒவ்வொரு வண்ணத்தின் பெயரையும் எழுதவும்.

வண்ணங்களின் பெயர்களை எழுதுவதற்கான அனைத்து வழிகளையும் எங்களிடம் காண்பிக்கவும். அதைபோல், ஒவ்வொரு வண்ண பெட்டியிலும் ஒவ்வொரு வண்ண பென்சிலைப் பயன்படுத்தி ஒருமுறை மட்டுமே பெயர்கள் குறிப்பிட்டு இருக்க வேண்டும். உங்களுக்கு ஒரு மாதிரி செய்து காட்டப்பட்டுள்ளது.







4th_Unit_06_Information_Term 1-TM.indd 72
12/21/2021 3:59:36 PM

## எடுத்துக்காட்டு

| 5 | 3 | 7 | 1 |
|---|---|---|---|

கொடுக்கப்பட்ட நான்கு எண்களை ஒரு முறை மட்டும் பயன்படுத்தி எத்தனை ஈரிலக்க எண்களை உருவாக்கலாம்?




12 ஈரிலக்க எண்களை நாம் உருவாக்கலாம்.

## செயல்பாடு

**2 கால் சட்டைகளையும் மற்றும் 4 சட்டைகளையும் பயன்படுத்தி, எத்தனை விதங்களில் உடைகளை மாற்றி அணியலாம்?**






4th_Unit_06_Information_Term 1-TM.indd 73 12/21/2021 3:59:37 PM

## முயன்று பார்

1. **TEACHER** என்ற கொடுக்கப்பட்ட வார்த்தையிலிருந்து 't' இல் முடியாத மூன்று எழுத்து வார்த்தைகளை உருவாக்குக.

| | | | | |
|---|---|---|---|---|
| Tea | Car | | | |

2. கீழே கொடுக்கப்பட்டுள்ள எழுத்துக்களை, ஒரே ஒரு முறை மட்டும் பயன்படுத்தி 5 எழுத்து வார்த்தைகளை உருவாக்குக.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| A | D | E | G | L | M | N | R | T |

| | | | | |
|---|---|---|---|---|
| ANGER | MEDAL | | | |

## இவற்றை முயல்க

't' என்று முடியும் மூன்று எழுத்து வார்த்தையை உருவாக்கவும்.

## பயிற்சி 6.1

**அ.** | 9 | 7 | 2 | ஆகிய மூன்று எண்களை ஒரு முறை மட்டும் பயன்படுத்தி எத்தனை மூன்று இலக்க எண்களை உருவாக்கலாம்?

**ஆ.** ஓர் உணவகத்தின் உணவு பட்டியலில் இருந்து நீங்கள் ஒரு சிற்றுண்டி மற்றும் ஒரு பானத்தை ஒரு சிற்றுண்டி யையும் ஒரு பானத்தையும் தேர்வு செய்ய வேண்டுமெனில் உங்களால் எத்தனை தெரிவுகள் செய்ய முடியும்.

| சிற்றுண்டி | பானம் |
|---|---|
| இட்லி | தேநீர் |
| பூரி | காபி |
| தோசை | பால் |
| பொங்கல் | |



4th_Unit_06_Information_Term 1-TM.indd 74 12/21/2021 3:59:37 PM

**இ.** கவினிடம் நான்கு அட்டைகள் உள்ளது 9 7 4 6

i) இந்த அட்டைகளை ஒரு முறை மட்டும் பயன்படுத்தி உருவாக்கக்கூடிய மூன்று இலக்க எண்களை பட்டியலிடவும்

ii) இந்த எண்களை ஒரு முறை மட்டும் பயன்படுத்தி உருவாக்கக் கூடிய மிகப்பெரிய நான்கு இலக்க ஒற்றை எண் என்ன?


**ஈ.** வேகமாக ஓடக்கூடிய A1, A2, A3, A4, A5 என்ற A6 ஆறு பேர் உள்ளனர். (குறுகிய இடத்தில் வேகமாக ஓடக்கூடிய ஒரு தடகளவீரர்), எத்தனை வெவ்வேறு விதமான வழிகளில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் ஆகிய மூன்று பதக்கங்களை அவர்களால் வெல்ல முடியும்?

## 6.2 செவ்வக விளக்க படங்களில் சேகரித்த மற்றும் கொடுக்கப்பட்ட விவரங்களை குறிப்பிடுதல்.

### செவ்வக விளக்கப்படம்

அமிர்தாவிற்கு தனது வீட்டில் உள்ள எழுதும் பொருள்களின் எண்ணிக்கையை எண்ணி வைக்கும் பணி ஒன்று கொடுக்கப்பட்டது. அவள் ஒன்றன் பின் ஒன்றாக எண்ணிப் பார்க்க ஆரம்பித்தார், ஆனால் சிறிது நேரத்தில் எண்ணிக்கையை மறந்துவிட்டு கவலைப்பட்டாள். அப்போது அவளுடைய தோழி வாணி அவளுக்கு உதவ வந்தாள். அவள் முதலில் ஒவ்வொன்றாக வகைப்படுத்தினாள். பென்சில்கள், அழிப்பான்கள், அளவுகோல்கள், பாடப் புத்தகங்கள், நோட்டு புத்தகங்கள், பத்திரிக்கைகள் மற்றும் கூராக்கி கருவி. இப்போது அமிர்தா அவற்றை எண்ணி கீழ்க்காணும் அட்டவணையில் எழுதுகிறாள்.

| எழுதுபொருள்கள் | எண்ணிக்கை | எழுதுபொருள்கள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| பென்சில்கள் | 4 | நோட்டு புத்தகங்கள் | 10 |
| அழிப்பான்கள் | 2 | கூராக்கி கருவி | 1 |
| அளவுகோல்கள் | 2 | பத்திரிக்கைகள் | 25 |
| பாடப்புத்தகங்கள் | 18 | | |






4th_Unit_06_Information_Term 1-TM.indd 75 12/21/2021 3:59:37 PM

## எடுத்துக்காட்டு

கலாவதி தன் பள்ளித் தோழர்களுக்கு பிடித்த பானங்களைக் கணக்கெடுத்து பின்வரும் செவ்வக விளக்கப் படத்தில் குறிப்பிடுகிறார்.


(i) குளம்பி அருந்துபவர்களின் எண்ணிக்கை____________

(ii) எந்த பானம் அருந்துபவர்களின் எண்ணிக்கை குறைவு?

(a) குளம்பி (b) தேநீர் (c) பால்

(iii) அதிகமானோரால் விரும்பப்பட்ட பானம் எது?

(a) குளம்பி (b) தேநீர் (c) பால்





## இவற்றை முயல்க

உங்கள் வகுப்பில் பயில்வோர் விரும்பும் விளையாட்டை வெளிப்படுத்தும் செவ்வக விளக்கப்படம் வரைக.

## பயிற்சி 6.2

**அ.** முதல் பருவத்தில் ஒரு மாணவன் பெற்ற மதிப்பெண்கள் செவ்வக விளக்கப்படம் மூலம் கொடுக்கப்பட்டுள்ளது. செவ்வக விளக்கப்படத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளி.




i. மிக அதிக மதிப்பெண் பெற்ற பாடம் ___________.

ii. மிகக் குறைந்த மதிப்பெண் பெற்ற பாடம்___________.

iii. சமமான மதிப்பெண் பெற்ற இரு பாடங்கள் ___________ மற்றும் ___________ ஆகும்.



4th_Unit_06_Information_Term 1-TM.indd 76 12/21/2021 3:59:38 PM

**ஆ.** மட்டைப்பந்து வீரர்கள் எடுத்த ஓட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மட்டைப்பந்து வீரரின் பெயர் | ஓட்டங்கள் (Score) |
|---|---|
| கண்ணன் | 60 |
| ரோகித் | 40 |
| பாபு | 50 |
| ராமு | 10 |

மேற்கண்ட விவரங்களுக்கு செவ்வக விளக்கப்படம் வரைக.

## 6.3 கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை வட்ட விளக்கப்படம் மூலம் விளக்குதல்


**வட்ட விளக்கப்படம் என்பது பல பாகங்களாக பிரிக்கப்பட்ட வட்டத்தைக் கொண்ட புள்ளியியல் விளக்கப்படமாகும் .**

### எடுத்துக்காட்டு

**கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களுக்கு வட்ட விளக்கப்படம் வரைக.**

ஒரு வகுப்பில் 60 மாணவர்கள் உள்ளனர். மாணவர்கள் காலை சிற்றுண்டி உண்ண உணவு விடுதிக்குச் செல்கின்றனர். அப்போது பாதி மாணவர்கள் இட்லியும், மீதி உள்ளவர்களில் பாதி மாணவர்கள் பூரியும், பாதி மாணவர்கள் தோசையும் உண்கிறார்கள்.

**விடை**





### இவற்றை முயல்க

**கொடுக்கப்பட்டுள்ள விவரங்களைப் பயன்படுத்தி வினாக்களுக்கு விடையளி.**

1. தமிழ் பேசுபவர்களின் எண்ணிக்கை __________
2. ஆங்கிலம் பேசுபவர்களின் எண்ணிக்கை __________
3. மலையாளம் பேசுபவர்களின் எண்ணிக்கை __________
4. தெலுங்கு பேசுபவர்களின் எண்ணிக்கை __________



4th_Unit_06_Information_Term 1-TM.indd 77 12/21/2021 3:59:38 PM





## செயல்பாடுகள்


1. உன் குடும்ப வரவு செலவு திட்டத்தில் உணவு, பேருந்து பயணச்செலவு மற்றும் இதர செலவுகளுக்கான பட்டியல் தயாரித்து வட்ட விளக்கப்படம் வரைக.
2. உன் நண்பர்களின் பிடித்தமான பழ வகைகளுக்கான பட்டியல் தயாரித்து வட்ட விளக்கப்படம் வரைக.

## பயிற்சி 6.3

**அ.** மனித உடலில் உள்ள ஊட்டச்சத்துக்களின் சதவீதத்திற்கான வட்ட விளக்கப்படம் கொடுக்கப்பட்டுள்ளது. விவரங்களைப் பட்டியலிடுக.




**ஆ.** ஒரு பனிக்கூழ் (ICE CREAM) கடையில் உள்ள இருப்பு விவரங்கள் கீழே வட்ட விளக்கப்படத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அதைப் பார்த்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி.




i. வட்ட விளக்கப்படத்தில் எத்தனை வகையான பனிக்கூழ்கள் உள்ளன?

ii. வெண்ணிலா பனிக்கூழ்களின் எண்ணிக்கை ________.

iii. சாக்லேட் மற்றும் பிஸ்தா பனிக்கூழ்களின் எண்ணிக்கை ________.

iv. மொத்தப் பனிக்கூழ்களின் எண்ணிக்கை ________.

**இ.** 30 மாணவர்கள் கொண்ட ஒரு வகுப்பில், வகுப்பிற்கு வருகை தராதவர்கள் பதிவு வரைபடத்தில் குறிக்கப்பட்டுள்ளது.




i. எந்த மாதத்தில் வகுப்பிற்கு வருகை தராதவர்கள் எண்ணிக்கை அதிகம்?

ii. எந்த மாதத்தில் வகுப்பிற்கு வருகை தராதவர்கள் எண்ணிக்கை குறைவு.

**ஈ.** உன் குடும்ப உறுப்பினர்களின் பிடித்தமான இனிப்புகளை பட்டியலிட்டு வட்ட விளக்கப்படம் வரைக.

**உ.** உன் வகுப்பு மாணவர்களுக்கு பிடித்த செல்ல பிராணிகளின் தகவல்களைச் சேகரித்துக் கொள்க. இவ்விவரங்களுக்கு செவ்வக விளக்கப்படம் மற்றும் வட்ட விளக்கப்படம் வரைக.

80LBD



4th_Unit_06_Information_Term 1-TM.indd 79
12/21/2021 3:59:39 PM